செ.வெ.எண்: 09/அக்டோபர் நாள்: 08.10.2020

## இராமநாதபுரம் மாவட்டம்

## இந்திய தரக்கட்டுப்பாட்டு முத்திரை (Bureau of Indian Standards) பெற்ற பொருட்களை மட்டுமே உற்பத்தி/விற்பனை செய்ய வேண்டும்

## மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ், இ.ஆ.ப., அவர்கள் தகவல்

இராமநாதபுரம் மாவட்டத்தில் மின் சாதனப் பொருட்கள் மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் உற்பத்தி/விற்பனை செய்யும் நிறுவனங்கள்/கடைகள் இந்திய தரக்கட்டுப்பாட்டு முத்திரை (Bureau of Indian Standards) பெற்ற பொருட்களை மட்டுமே உற்பத்தி / விற்பனை செய்ய வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளதாவது:

தமிழக அரசு, மாவட்ட அளவில் மின் சாதனப் பொருட்கள் மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் உற்பத்தி மற்றும் விற்பனை செய்யும் நிறுவனங்கள் மற்றும் கடைகளில் தரக்கட்டுப்பாடு உறுதி செய்திட மாவட்ட அளவிலான செயலாக்க அலுவலராக மாவட்ட தொழில் மைய பொது மேலாளரை நியமித்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி மேற்குறிப்பிட்டுள்ள உற்பத்தி நிறுவனங்கள், விற்பனை நிறுவனங்கள் மற்றும் சேமிப்பு கிடங்குகள் ஆகியவற்றை ஆய்வு செய்திட மாவட்ட செயலாக்க அலுவலருக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

மின்பொருட்கள், மின்கம்பி, கேபிள், மின்சாதனங்கள், பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் எண்ணெய் அழுத்த அடுப்பு (Oil pressure stove) ஆகியவற்றை உற்பத்தி செய்யும், விற்பனை செய்யும் நிறுவனங்கள் எவ்வித முன்னறிவிப்புமின்றி, பொது மேலாளர்/மாவட்ட செயலாக்க அலுவலரால் ஆய்வு செய்யப்படும். மேற்குறிப்பிட்டுள்ள நிறுவனங்கள் இந்திய தரக்கட்டுப்பாட்டு முத்திரை பெற்ற பொருட்களை மட்டுமே உற்பத்தி / விற்பனை செய்ய வேண்டும். தரமற்ற பொருட்களை உற்பத்தி / விற்பனை செய்யும் நிறுவனங்கள் மீது சட்டபூர்வமான நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**